7. ஆசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

இ. முன்பண செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1981–82 (ஆ. இ.).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆளுநரிட மிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது.

"In pursuance of Article 203, clause (3), of the Constitution of India, I, Sadiq Ali, Governor of Tamil Nadu, hereby give me recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Advance Grants during the year 1981-82."

(முற்பகல் 11-10.)

8. செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் 1981—82.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" 1981—82 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 26—3—1981 ஆம் நாளிட்ட அறிவிப்பில் 1 முதல் 56 முடிய இலக்கமிடப்பெற்ற மானியக் கோரிக்